## <u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

## <u>O.S.No.232/2021</u>

2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 07–ம் நாள் PW–1 என்பவரின் சாட்சியாகிய நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10வது விதியின் படி) திரு.கோதண்டராமன் பென்ச் கிளார்க் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : பிரேமாவதி | உத்திரமேரூர் |
| த/பெ | : குப்பன் | |
| வயது | : 55 | |
| தொழில் | : வீட்டுக்குடித்தனம் | |

<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கின் 2ம் வாதி ஆவேன். இவ்வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு தெரியும். நான் என்னுடைய பிரமாண சாட்சிய வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது.

1) 16.07.2020 தேதியில் பிரதிவாதி பர்வீன் எனது கணவர் குப்பனிடம் ரூ. 2 லட்சம் பெற்றுக்கொண்டு ரூ.20 முத்திரை தாளில் எழுதிக்கொடுத்துள்ள கடன் ரசீது அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 18.06.2021 தேதியில் எனது கணவர் வழக்கறிஞர் மூலமாக அனுப்பியுள்ள வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) மேற்படி அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சல ரசீது அசல் மற்றும் அறிவிப்பை 19.06.2021 தேதியில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 28.06.2021 தேதியில் பிரதிவாதி அனுப்பியுள்ள பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) எனது கணவர் குப்பன் 24.06.2022 தேதியில் இறந்ததாக வழங்கப்பட்டுள்ள இறப்பு சான்றிதழ் கணினி நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) இறந்த குப்பன் என்பவருக்கு 04.09.2022 தேதியில் வழங்கப்பட்டுள்ள வாரிசு சான்றிதழ் கணினி நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை **(Exparte)**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-A.Mohamed Ali,
Additional Subordinate Judge,
Kancheepuram.